# பத்திரிக்கை செய்தி

## உட்பிரிவு பட்டா வழங்குவதற்காக ரூ.9,000/- லஞ்சம் வாங்கிய நில அளவை பிரிவு சார்-ஆய்வாளர் மற்றும் அவரது உதவியாளர் கைது

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் காந்தி நகரை சேர்ந்த திரு.நாகராஜன் என்பவரின் மனைவி சங்கீதா என்பவர் பர்கூர் வட்டம், மல்லப்பாடி கிராமத்தில் உள்ள தனது 7 சென்ட் காலி இடத்தை தனது மகன் ஹரிஹரனுக்கு கடந்த மாதத்தில் தான செட்டில்மென்ட் செய்து கொடுத்துள்ளார். அந்த நிலத்தை உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளார். மேலும் இது தொடர்பாக பர்கூர் தாலுகா நில அளவை பிரிவு சார்-ஆய்வாளர் குமரன் என்பவரை திரு.நாகராஜன் சந்தித்து பேசி தனது நிலத்தை அளவீடு செய்துள்ளார். அப்போது நிலத்தை அளந்து உட்பிரிவு செய்து தருவதற்காக நில அளவை பிரிவு சார்-ஆய்வாளர் குமரன், நாகராஜனிடம் பணம் ரூ.10,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். நாகராஜன் தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொல்லியதால் இறுதியாக ரூ.9,000/- பணம் லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத நாகராஜன் இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறையில் நில அளவை பிரிவு சார்-ஆய்வாளர் குமரன் மீது நடவடிக்கை எடுக்குமாறு நேற்று (23.01.2025) புகார் அளித்துள்ளார். அந்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்த லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் சார்-ஆய்வாளர் குமரனை பொறி வைத்து பிடிக்க நடவடிக்கை மேற்கொண்டனர். இதில் லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் அறிவுரைப்படி இரசாயனம் தடவிய பணத்தை நாகராஜன் எடுத்துக்கொண்டு சென்று சார்-ஆய்வாளர் குமரனை சந்திக்க நேற்று (23.01.2025) மதியம் பர்கூர் தாலுகா அலுவலகத்தில் காத்திருந்துள்ளார். அப்போது அங்கு வந்த பர்கூர் நில அளவை பிரிவு சார்-ஆய்வாளர் குமரன் இரசாயனம் தடவிய லஞ்ச பணம் ரூ.9,000/-த்தை தனக்கு உதவியாக வைத்திருந்த நபர் சுகேல் என்பவர் மூலம் நாகராஜனிடமிருந்து வாங்கியுள்ளார். அப்போது அங்கே மறைந்திருந்த கிருஷ்ணகிரி லஞ்ச ஒழிப்பு துறையினர் லஞ்சம் வாங்கிய குமரன் மற்றும் சுகேல் ஆகியோரை சுற்றி வளைத்து பிடித்தனர். லஞ்ச பணம் மற்றும் சில ஆவணங்கள் ஆகியவற்றை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். பின்னர் லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக மேற்படி சார்-ஆய்வாளர் குமரன் மற்றும் அவரது உதவியாளர் சுகேல் ஆகியோரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக அழைத்து சென்றனர்.